அருளோசை

திருவள்ளுவ
ஆண்டு 200
ஆனி
1974 ஜூன்

சமய பாட போதனைத் திங்களிதழ்



தமிழ்நாடு தெய்விகப் பேரவை
9, மகாராஜா சூரியராவ் சாலை,
சென்னை-600 018
தொலைபேசி : 7682

அட்டைப்பட விளக்கம்

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

—:o:—

பண்ணூறு கிளிமொழிப் பாவைநின் திருமேனி
பாசொளி விரிப்ப வந்தண்
பவளக் கொடிக்காமர் பச்சிளங் கொடியதாய்ப்
பருமுத்த மரகத மதாய்த்
தண்ணூறு மல்லற் றுறைச்சிறை யனங்களி
தழைக்கும் கலாமஞ் ஞையாய்ச்
சகலமும் நின்திருச் சொருபமென் றேவிடும்
சதுர்மறைப் பொருள் வெளியிடக்
கண்ணூறு குழலியர் குடக்கொங்கை பொங்குசெங்
களபமும் கத்தூரியும்
கப்புரமும் ஒக்கக் கரைத்தோடி வாணியும்
காளிந்தியும் கங்கையாம்
விண்ணூறு மளவலாய் விளையாடு புதுவைகை
வெள்ளநீ ராடியருளே !
விடைக்கொடி யவர்க்கொரு கயற்கொடி கொடுத்தகொடி
வெள்ளநீ ராடியருளே !

—குமரகுருபரர்

திருவால வாய்க்கு இணையாம் ஒருதலமும்
தெய்வமணம் செய்யப் பூத்த
மருவார் பொற் கமலம்நிகர் தீர்த்தமும் அத்
தீர்த்தத்தின் மருங்கின்ஞான
உருவாகி உறைசோம சுந்தரன்போல்
இகபரம் தந்து உலவாவீடு
தருவானும் முப்புவனத் தினும் இல்லை
உண்மையிது சாற்றின் மன்னே !

—பரஞ்சோதி முனிவர்.

ஆனந்த ஆண்டு ஆனித் திங்கள் 12 ஆம் நாள் (26-6-74) புதன் கிழமையன்று மதுரைத் திருக்கோயிலில் திருக்குட நன்னீராட்டு நடைபெறுகிறது.

அருளோசை

திங்களிதழ்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு.

மணி 2	ஆனந்த ஆனி 1974 ஜூன்	ஓசை 12

அருளோசை அன்பர்களுக்கு, வணக்கம்.

"அருளோசை'க்கு இந்த இதழோடு இரண்டு ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. அடுத்த இதழ் மூன்றும் ஆண்டின் முதலிதழாகப் புதுமைப் பொலிவோடு வெளிவரும்.

இந்த இதழில், ஓராண்டில் வெளியான கட்டுரைகளின் தொகுப்பு வெளியிடப் பெற்றுள்ளது. இது 'அருளோசை' ஓராண்டு இதழ்களைச் சேர்த்து 'பைண்டிங்' செய்து கொள்பவர்களுக்கு மிகுதியும் பயன் படும்.

அடுத்த இதழில் புதிய மாற்றங்கள் ஏதேனும் செய்யவேண்டும் என்று அன்பர்கள் விரும்பினுல் அன்புகூர்ந்து அவற்றை எழுதியனுப்ப வேண்டுகிறேன்.

இந்த இதழோடு பலருடைய சந்தாக்கள் முடிவடைகின்றன, அன்பர்களுக்குத் தனித்தனியே அஞ்சலட்டை மூலம் அறிவிக்கப் பெறும். அவர்கள் தங்கள் சந்தாக்களை உடனடியாகப் புதுப்பித்து, 'அருளோசை'யின் சமயத்தொண்டு மேலும் வளர்ச்சி பெற உறுதுணை செய்வார்கள் என நம்புகிறேன்.

அ. நாராயணசுவாமி, பி.ஏ.,
பதிப்பாசிரியர்.

இந்த இதழில்

"அருளோசை"

வினா விடைப் பகுதி-மே-74

பரிசு பெற்றவர்கள்

முதல் பரிசு : திரு. பி. எம். வேலாயுதம், புளியங்குடி, திருநெல்வேலி மாவட்டம், சந்தா எண். 974.

இரண்டாம் பரிசு : திரு. வே. அரங்கசாமி, அதிகாரப்பட்டி, தர்மபுரி மாவட்டம், சந்தா எண். 2725.

மூன்றாம் பரிசு : செல்வி. வே. பரமேசுவரி, சென்னை-600 018, சந்தா எண். 3022.

நான்காம் பரிசு : (1) செல்வன். கோ. இராமமூர்த்தி, பட்டீச்சுரம், தஞ்சை மாவட்டம், சந்தா எண். 3001.

(2) திரு எஸ். கிருஷ்ணன், ஹார்விபட்டி, மதுரை-5, சந்தா எண். 2912.



திருவளர் செல்வ,

நல்வாழ்த்துக்கள் !

ஒரு விதை முளைக்கிறது; முளைத்துப் பயிராகி முடிவில் முன் விதையைப் போலவே விதையைத் தோற்றுவிக்கிறது. ஒரு விதை தன்னைப்போலவே ஒரு விதையைத் தோற்றுவிக்கிறது. வேறு எதையும் தோற்றுவிப்பதில்லை. ஏன்? இயற்கை நிகழ்வுகளில் இந்த இயல்பு பொருந்திக் கிடக்கிறது. இதனைத் ‘தற்செயல்’ என்று சிலர் கூறுவர். கடவுள் நம்பிக்கையுடையவர்கள் இது, ‘கடவுளின் ஆணை’ என்பர். சிசரோ என்ற பேரறிஞன் “உலகியல் நடைமுறைகளில் ஓர் ஒழுங்கு-முறை பிறழாத நிகழ்ச்சி தென்படுகிறது. இதற்குக் காரணம் கடவுளே!” என்று கூறுகின்றான். பௌத்தர்கள் இந்த விடைகளை ஏற்றுக்கொள்வதில்லை பொருள்களின் சுபாவம், தொழிற்படத் துணைசெய்யும் புறச்சாதனங்கள் இவையிரண்டுமே காரணம் என்பது பௌத்தர் கொள்கை. ஒரு நிகழ்வின் தொடக்கம் புறக் காரணங்களில் இருக்கிறது. நிகழ்ச்சி தொடங்கிவிட்டால் சாதகமான சூழ்நிலை நீடிக்கும் வரை தொடர்ந்து நிகழ்வது சுபாவத்தைப் பொறுத்தது. ஒளிவிளக்கு, திரி-எண்ணெய் இன்றித் தோற்றமில்லை. திரி, எண்ணெய் இவற்றின் துணைகொண்டு தோன்றியபின் அவற்றுள் ஏதாவது ஒன்று குறையும்வரை எரிந்துகொண்டிருக்கும். இதனைப் பௌத்தர் ‘பிரத்திய சமுத்பாதம்’ என்பர். இந்த நிகழ்வுகளை-இந்த இயற்கையின் நிகழ்வுகளைப் பௌத்தர்

சுபாவம் என்றோ, இறைவனின் ஆணையென்றோ கொள்ளாதது ஏன்? என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? இயற்கைச் சுபாவம் என்றோ, இறைவனின் ஆணையென்றோ கொள்ளின் மனிதனின் முயற்சிக்கு இடமில்லாமற் போகும் என்பதே பௌத்தரின் கவலை.

பௌத்தருக்குக் 'கணபங்கவாதிகள்' என்ற பெயரும் உண்டு. பௌத்தருக்கு இந்தப் பெயரைச் சிறப்பாகச் சித்தாந்திகள் சூட்டியுள்ளனர். கணபங்கவாதிகள் என்ற பெயரைப் பௌத்தர்கள் பெற்றதற்குக் காரணம் எந்த ஒரு பொருளும் ஒருவிநாடிகூட நிலைத்து நிற்பதில்லை என்று கூறுவதால்தான். உலகியலில் மிகவும் இயல்பினதாகிய மாற்றம் பற்றி ஆராயத்தொடங்கி "மாறும் பொருள் இல்லை; மாற்றமே பொருள்; ஒரு பொருளும் ஒருவிநாடியும் நிலைப்பதில்லை" என்ற முன்னுக்குப் பின் முரணான-விந்தையான முடிவுகளைப் பௌத்தர் அடைந்தனர். இந்தப் பௌத்தக் கொள்கைகள் ஆய்வுக்குரியன. பொருள் மாறிவிட்டது என்றால், அடையாளம் கண்டுகொள்ள முடியாதபடி மாற வேண்டும். அங்ஙனமல்லாதபோது, அதனை எப்படி மாற்றம் என்பது? நமது நண்பன் நேற்றுப் பார்த்தவனாகவே இன்றும் இருக்கிறான். ஆனால், பௌத்தர் "அவனல்ல இவன்" என்பர். ஒன்றுபோற் காணப்படும் இருவேறு பொருள்களை ஒன்றென்றே நாம் கருதுவதாகக் கூறி அதனைத் தவறு என்பர். எரிகின்ற விளக்கில் சுடர்விடும் தீக்கொழுந்துகள் ஒன்றன்பின் ஒன்று தோன்றுவது மாறுபட்டதே என்பர் பௌத்தர் ஒருபுறம் அஃது உண்மையானாலும் வேற்றுமை தெரியாததால் நாம் வேறு வேறு என்று கருதுவதில்லை. தீக்கொழுந்தைப் பொறுத்தவரையில் பௌத்தர்களின் கொள்கையில்-விவாதத்தில் நியாயம் இருப்பதுபோலத் தோன்றினாலும் அது நிறைவுடையதல்ல. நம் கையிலுள்ள புத்தகம் கணத்திற்குக் கணம் மாறுவதில்லை.

நாம் அன்றும் இன்றும் ஒரே மனிதராக இல்லாதுபோனால் நினைவு ஏது? சின்னஞ்சிறு வயதில் படித்த பாடலைச் சொல்ல முடிகிறதே! இந்தக் கேள்விக்கும் பௌத்தர் சமாதானம் சொல்கின்றனர். மனிதனின் அனுபவம் ஒன்று மறைந்து பிறிதொன்று தோன்றுகிறது. அங்ஙனம் பின்னே தோன்

றும் அனுபவம் முன் அனுபவத்தின் ஆற்றலையும் விளைவையும் தன்னகத்து ஈர்த்து உள்ளடக்கிக்கொண்டு தோன்றுகிறது. எனவே இங்கேயும் மனிதன் மாறுபடுகிருன். ஆனுலும் முற்றிலும் வேருனவர்களல்ல. அதனுல், நினைவு இயங்கு கிறது என்பது பெளத்தர் விடை.

'விடிைக்கு விடிை பொருள்கள் மாறி விடுகின்றன; உயிர் கள் மாறிவிடுகின்றன; மக்கள் மாறிவிடுகின்றனர், என்ற பெளத்தர் கொள்கையை ஏற்றுக்கொள்வோமானுல் நாம் விநோதமான-விபரீதமான முடிவுகளையும் ஏற்க வேண்டி யிருக்கும். கடன்கொடுத்தவன் ஒருவன். ஆனுல், திரும்பப் பெறுபவன் வேருெருவன். குற்றம்செய்தவன் தண்டனையைப் பெறமாட்டான். புண்ணியம்-பாவம் இடம் மாறிச் சென்றடை யும். அப்படியாயின் நியதி எங்கே? ஒழுக்கம் எங்கே? நெறி களாலும் முறைகளாலும் தன்னை உயர்த்திக்கொள்ளும் ஆன்மாவின் முயற்சிகள் எங்கே? ஏன்? இக்கொள்கை ஏற்றுக்கொள்ளப் பெறுமாயின் நெறிகளும் முறைகளும் வேண்டாதனவாகிவிடும். ஆனுல், கூர்த்த மதி வாய்ந்த பெளத்தர், இதற்கும் சமாதானம் கூறுகின்றனர். குற்றம் செய்தவனும், தண்டனை பெறுபவனும் வேறு வேறு தானும். ஆனுலும், இவர்கள் முற்ருகவும் வேறுபட்டவர்களல்ல. தண்டனையைப் பெறவேண்டிய அளவுக்கு முன்னவனேடு பின்னவனுக்குத் தொடர்பு உண்டு. ஆயினும், பெளத்தரின் விடை விளக்கமாக இல்லை.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

குன்றக்குடி அடிகளார்

திருவாசகம்

பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன்; பெம்மான்; பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்து ஈசன்
கண்சுமந்த நெற்றிக்கடவுள்; கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானய்!

—மாணிக்கவாசகர்.

உ

வருக! இராமேஸ்வரம்

இராமேசுவரம் தீவில் அமையப்பெற்றுள்ள அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில் மனம் கவரும் புராதன சிற்பக்கலைக் காட்சிகளுடனும், மிகப்பெரிய பிரகாரங்களையும் கொண்டதாக விளங்குகிறது. இராமாயண வரலாற்றுத் தொடர்பு கொண்டுள்ள இத்தலம் பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களுள் ஒன்றாக விளங்குவதுடன், வடக்கே காசியும், தெற்கே இராமேசுவரமும் என இந்துக்களுக்குத் தலைசிறந்த இரு பெரிய புண்ணிய தலங்களாகும்.

இத் திருக்கோயிலில் எல்லா நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. சேவார்த்திகள் வசதியாகத் தங்கவும், முறையாக வழிபடவும், இங்கு முக்கியமாகக் கருதப்படும் இலக்குமண தீர்த்தம், தனுஷ்கோடி, கந்தமாதன பர்வதம் முதலான இடங்களுக்குப் போவதற்கு வசதியும் இக்கோயில் நிர்வாக அதிகாரியை அணுகுவதன் மூலம் அடையலாம்.

இக்கோயிலில் ஸ்ரீ இராமநாதசுவாமிக்கும், ஸ்ரீ பர்வத வர்த்தினி அம்பாளுக்கும் நடைபெறும் கோடி அர்ச்சனையில் சகஸ்ரநாமம் ஒன்றுக்கு ரூ. 10/- வீதம் கட்டணம் செலுத்தி அர்ச்சனை செய்து திருவருள் பிரசாதமும், வெள்ளிக் காசும் பெறலாம்.

இக்கோயிலில் நடைபெற்று வரும் மாபெரும் திருப்பணிக்குத் தாராளமாக நன்கொடை வழங்க வேணுமாய் வேண்டப்படுகிறது. இந்த நன்கொடைக்கு வருமானவரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இராமேசுவரம்,
தமிழ்நாடு.

நிர்வாக அதிகாரி
அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில்.



தவத்திரு. குன்றக்குடி அடிகளார்

“செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்” என்பது வள்ளுவர் வாக்கு. செல்வங்களில் எல்லாம் சிறந்தது செவி வழியாகக் கேட்கும் கேள்விச் செல்வம். ஏன்? ஏனைச் செல்வங்களை யெல்லாம் பெறுதற்குத் துணையாய அறிவினை வழங்குவதில், கேள்வி துணை செய்வதைப் போலப் பிறிதொன்று துணை செய்வதில்லை. ஏன்? கற்கும் கல்வியின் மூலம் அறிவு பெற நூல்களைக் கற்கின்றோம். நூல்களை ஆக்கியோர் முழுமையான பட்டறிவுடையோர் என்று கூறுதல் இயலாது. அதோடு, நூல்களின் ஆசிரியன் காலமும் வாழ்கின்ற நமது காலமும் மாறுபட்டன. ஆதலால் நூல்கள் நடைமுறை வாழ்க்கைக்கு ஓரளவு தான் துணை செய்யும். ஆனால், கேள்வியோ நமது காலத்திலேயே வாழும் மனிதர் சொல்வது; அதுமட்டுமல்ல, இங்கே சொல்லுபவர் பல நூல்களைக் கற்றவராகவும், அனுபவங்களைப் பெற்றவராகவும் இருப்பார். மேலும், நூலாசிரியன் சொல்லுகிற ஆசிரியன் அளவுக்கு உணர்விற் கலப்பதில்லை. ஆதலால், நூல்கள் கற்கும் முயற்சியிலும் சிறப்புடையதே ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் சொல்வதைக் கேட்பது.

இங்ஙனம், செவிச் செல்வம் உயர்ந்ததாயினும் நூல்களைக் கற்பதால் விளையும் தீங்கைவிடச் செவியினால் விளையும் தீங்கும் அதிகமாகிறது. நூல்களைக் கற்க முயற்சி தேவை. இந்த முயற்சியை எளிதில் எல்லோரும் பெறுவதில்லை. ஆனால், செவிகள் எப்போதும் திறந்த நிலையின. கேட்டுக் கொண்டேயிருக்கும் இயல்பின. அதுபோலவே நூலாசிரியர்களாக எல்லோரும் ஆகிவிடுவதில்லை. மிகச் சிலர்தான் எழுதுகின்றனர். ஆனால், வாய் படைத்தவர்களெல்லாம் சொல்கின்றனர்; எதைச் சொல்லுகின்றோம் என்று எண்ணிக்கூடப் பார்த்துச் சொல்லும் தகுதியில்லாதவர்கள், இன்று சொல்லுகின்றனர். நூலிலே விளையும் குற்றங்களை விடச் சொல்லிலே விளையும் குற்றங்கள் மிகுதி. வள்ளுவர் சொல்லிலே தோன்றும் குற்றங்களை வகுத்தும் விரித்தும் கூறியுள்ளார். அதாவது: பயனில சொல், நயனில சொல், இன்னாகூறல், புறங்கூறல், பொய்மை, தீச்சொல் என்றெல்லாம் சொல்லில் வரும் குற்றங்களை

எடுத்துக்காட்டியுள்ளார். வாய் படைத்தவர்கள் உண்ணலாம். அது அவர்களின் ஏகபோக உரிமை. அந்த உரிமையில் நாம் யாரும் தலையிடத் தயாராயில்லை. ஆனால், வாய் படைத்தவரெல்லாம் சொல்லத் தொடங்கினால் அது மற்றவர்க்கு அல்லவா வேதனையாகிறது. இன்று 'வதந்தி' என்ற ஒரு புதுவகைச் சொல் சமுதாயத்தை எவ்வளவு அலைக்கழித்து வருகிறது! அதுபோலவே, அரசியலின் பேரால் நடைபெறும் மேடைகளில் இன்று வார்த்தைகளா வழங்கப்பெறுகின்றன! இல்லை, இல்லை, வசையேதான்! ஆதலால், செவிச்செல்வம் உயர்ந்ததும் கூட! ஆனால் அதை அடைவது எளிதன்று. அதனால்தான் வள்ளுவம் "எனைத்தானும் நல்லவை கேட்க!" என்றது.

இன்று நிறைவான செவிச்செல்வம் மிகுதியும் கிடைப்பதில்லை. ஒன்றை எடுத்துச் சொல்லும் தகுதி, நிறைந்த பட்டறிவுடையோருக்கேயுண்டு. ஆனால், இன்று நம் நாட்டில் ஒரு புதுவிதமான விவாதம் தொடங்கியுள்ளது. அது என்ன? சொல்லுகிறவருடைய சிந்தனையும் செயலும் ஒத்திருக்க வேண்டுமென்பது. இந்தக் கொள்கை, கொள்கையளவில் தவறில்லை; சரியானதும்கூட. ஆனால், நடைமுறைச் சாத்தியம் அல்லது மனிதனின் பரிணாம வளர்ச்சி என்பதை மையமாகக் கொண்டு எண்ணும்பொழுது இக்கொள்கை நடைமுறைக்கு இசைந்ததன்று. தண்ணீர் வெள்ளத்துக்குள் வீழ்ந்து தவிக்கும் ஒருவன், கரையில் நிற்பவனை 'ஏரி ஆழமானது; வீழ்ந்து விடாதே!" என்று எச்சரிப்பதில் என்ன தவறு? ஒன்றில் வீழ்ந்து தத்தளிப்பவர்தானே மற்றவர்களை விழாதே என்று எச்சரிக்க முடியும். அதுபோலவே வாழ்க்கையில் தவறுகள் செய்தவர்களும், தவறுகளை நினைந்து வருந்துபவர்களும் தவறுகளிலிருந்து மீளப் போராடிக் கொண்டிருப்பவர்களும் மற்றவர்களைத் தவறு செய்யாதே என்று கூறுவது தவறு அன்று. ஆயினும், சொல்பவர் முழுமையான அனுபவ முதிர்ச்சியுடையவராகவும், கேட்டோரிடம் கங்குகரையற்ற பரிவு உடையவராகவும் இருத்தல் வேண்டும். ஆதலால், செவி கேட்பதற்குரியது; கேட்பதன் மூலம் நிறைந்த ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்குரியது. ஆனால், செவிச் செல்வத்தைத் தேர்ந்து கேட்க வேண்டும்; தெளிந்து கைக்கொள்ள வேண்டும். இயல்பான வடிகட்டிகள் செவிகளுக்கு இல்லாததால் நாம் நம்முடைய பகுத்தறிவை வடிகட்டியாகப் பயன்படுத்திக் கொள்ளாமல் செவியிற் கேட்பதைச் செயலுக்குக் கொண்டுவரக் கூடாது பகுத்தறிவோடு தொடர்பில்லாத செவிவழிச் சொற்கள் உணர்ச்சிகளையே தூண்டும். இவை அறிவுக்கும் பயன்படா. ஆள்வினைக்கும் துணை செய்யா; வாழ்க்கைக்கும் பயன்படா. ஆதலால், செவியினை முறையாகப் பயன்படுத்தக் கற்றுக்கொள்வது அவசியம். வாய்ப்பிருந்து நல்ல செவிச்செல்வம் கிடைக்குமானால் கோடை மழை பெய்ததைப் போல ஆன்மா செழிக்கும். அதனால்தானே, ஆன்றோர் காலந்தொட்டு உணர்வைத் தரும் தகுதியில் மிகவும் சிறந்தவர் சொல்லும் ஆசிரியனே என்பதைச் சமய மரபில் தோன்றிய ஆலமர் செல்வனிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. செவிச்செல்வம் கொள்வோமாக! தேர்ந்து கொள்வோமாக; தெளிந்து செயற்படுவோமாக!



மெய்ப்பொருள் காண்பது அறிவு

அறிவை அமைக்கும் முறை-வள்ளுவர் வழியில்

டாக்டர் வித்துவான் திரு. வை. இரத்தினசபாபதி, எம்.ஏ., பி.ஓ.எல்., பிஎச் டி.,

முன்னுரை :

திருவள்ளுவர் வழியில் நின்று அறிவை அமைக்கும் முறை பற்றிய மூன்ருவது கட்டுரை இது. இரண்டு குறட்பாக்களே மையமாக வைத்து, செய்திகள் யாவும் அறிவாக அமைய மாட்டா என்றும்; செய்தியை அறிவாக அமைக்கும் முறை இன்னது என்றும்; அறிவை அமைப்பதற்குரிய செய்திகளைத் தரும் ஆற்றல் உடையவைகளாக இருவகைத் துய்ப்பு முறைகள் காணப்படுகின்றன என்றும்; அவை நேர்முகத் துய்ப்பு, செவிவழித் துய்ப்பு எனப் பெயர் பெறுகின்றன என்றும் முன்னர் அமைந்த இரண்டு கட்டுரைகளிற் குறிப்பிடப் பெற்றன. திருவள்ளுவர் கருத்தை முழுமையாக உணர்வதற்கு மேலும் ஒரு தேவை உண்டு. இரண்டு திருக்குறள்களிலும் பொதுவாக அமைந்துள்ள ஒரு தொடர் "மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்பதே. அதனுள் 'மெய்ப்பொருள்' என்ற சொல்லால் திருவள்ளுவர் எதைக் குறிப்பிடுகிருர் என்பதை ஆராய்ந்து அறிதல் வேண்டும்.

மெய்மை என்பதன் பொருள் என்ன ?

(1) உலகியல் வழக்கில் பயிலப் பெற்று வரும் பொய்மை, மெய்மை என்பவைகளின் விளக்கங்களை நான் இங்கே குறிப்பிடவில்லை.

மெய்மை என்பதை அளவை இயல் (Logic) இரண்டு வகைகளில் ஆராய்கிறது. அமைப்பியல் மெய்மை என்றும் பொருளியல் மெய்மை என்றும் பெயரிட்டழைக்கலாம். இவ்விரண்டையும் கீழ்க்கண்ட எடுத்துக்காட்டுக்களின் மூலம் உணரலாம்.

> ஆடம்பரப் பிரியர்கள் அனைவரும் பெண்கள் ஆவர்.
> ஆண்கள் பெண்கள் அல்லர்
> எனவே ஆண்கள் ஆடம்பரப் பிரியர்கள் அல்லர்.

இது ஒரு முக்கூற்று வாதம். இம்முக்கூற்று முடிவு நிலையானது அமைப்பு முறையில் சரியானது. ஆனல் அனுபவ முறையில் மெய்மை என ஒத்துக் கொள்ள இயலுமா? எனில் இல்லை. இம்மாதிரியான வாதங்களை அமைப்பியல் மெய்மையுடையது எனக் கொள்ளலாம்.

இனி, 'பொருளியல் மெய்மை' எவ்வாறு அமைகிறது எனக் காணலாம்.

பழியார்ந்த செயல்கள் யாவும் மகிழ்ச்சி தருவன அல்ல.
கொலை ஒரு பழியார்ந்த செயல்

எனவே கொலைச்செயல் மகிழ்ச்சி தருவது அன்று. இந்த வாதம் அமைப்பு முறையாலும் பொருள் முறையாலும் மெய்மையுடையது எனக் கொள்ளலாம்.

இம்முறைகளை விரிவாக ஆராய்ந்த பெருமக்கள் உண்மை (Truth) என்றும், ஏற்புடைமை (Validity) என்றும் இரு பிரிவுகளை அமைத்தார்கள். ஏற்புடையவைகள் எல்லாம் உண்மையானவை என்று ஒத்துக் கொள்ள முடியாது. அவ்வாறே உண்மையானவைகள் எல்லாமே ஏற்றுக் கொள்ளக் கூடியவைகளாக இருக்கும் என்பதையும் பொதுவான நிலையில் ஏற்றுக்கொள்ள வேண்டுமே யொழிய முற்றுண்மையாக ஏற்றுக் கொள்ள இயலாது.

எல்லாக் காக்கைகளும் கருமை நிறமுடையவை ஆகும் என்பதை இன்றைக்கு முற்றுண்மை என ஒத்துக்கொள்ளும் அளவையியல் நாளைக்கு ஒரு வெள்ளைக் காக்கையைக் கண்டபோது தான் இதுவரை கொண்டிருந்த கருத்து முற்றுண்மையன்று என ஒத்துக் கொள்ளத் தான் போகிறது.

எனவே ஒரு செய்தியை மதிப்பீடு செய்யும் வகையில் ஏற்புடைமையா? உண்மையா? என வேறுபிரித்துக் காட்டி மதிப்பீடு செய்தல் வேண்டும் என்ற கருத்தை ஒத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இவ்வடிப்படையில் திருவள்ளுவர் மெய்ப்பொருள் காண்பது என்பதை ஏற்புடைமை என்ற பொருளில் அமைக்கின்றாரா? அல்லது உண்மை என்ற பொருளில் அமைக்கின்றாரா? என்பதை நாம் முடிவு செய்து காணவேண்டும். ஏனெனில் இன்று பெரும்பான்மையான செயல்கள் ஏற்புடைமை என்ற ஒன்றை மட்டுமே கருத்திற் கொண்டு உண்மை என முடிவு செய்யப் பெறுகின்றன,

எடுத்துக்காட்டாக இன்று நீதிமன்றங்களில் வரும் வழக்கின் முடிவுகளைக் கொள்ளலாம். பெரும்பான்மையான வழக்குக்கள் ஏற்புடைமையை அடிப்படையாகக் கொண்டே முடிவு செய்யப் பெறுகின்றன. ஒரு நீதிபதி கூறிய தீர்ப்பை எதிர்த்து, வேறு ஒரு நீதிமன்றத்தில் முறையிட ஒருவனுக்கு உரிமை அளிக்கப்பெறுகிறது என்பதே இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டதுதான்.

(2) திருவள்ளுவர் "பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருள்" என்று குறிப்பிடுவதைக் காணலாம். பொருள் அல்லாதவைகளைப் பொருள் என்று கொள்ளுவது அறிவின்மை என்று குறிப்பிடுவதை அடிப்படையாகக் கொண்டும் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்பதை முடிவு செய்ய வேண்டியிருக்கிறது.

பொருளல்லவற்றைப் பொருள் என்று உணர்தல் என்பதற்குப் பொய்ப் பொருளை மெய்ப்பொருளாகக் காணுதல் என்று உரை கூறுவது ஒரு வழக்கம். பொய்ப்பொருள் என்ற ஒன்று உலகில் இல்லை உள்பொருள் அல்லது இல்பொருள் என இருவகைகளே. நாம் காணும் பொருள்கள் அனைத்தும் உள் பொருள்களே. ஆகாயப்பூ, குதிரைக் கொம்பு முதலியவை இல்பொருள்கள். இல்பொருள்கள் என்பவை என்றைக்கும் இல்லாத பொருள்களே. திருவள்ளுவர் கூறும் பொய்ப் பொருள் என்பது இவ்வகையைச் சாராது.

பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணருதல் என்பதை இரண்டு வகைகளில் விளக்கம் செய்து காணலாம். மாலைநேரத்தில் வேலி ஓரத்தில் கிடக்கும் ஓலையைப் பாம்பு என நினைத்து மருண்டோடுகிறான். இங்கே மெய்ப்பொருள் ஓலை. பொய்ப்பொருள் பாம்பு. மருண்டோடிய அந்த நேரத்தில் அது அவனுக்கு மெய்ப்பொருளே. மீண்டும் அவனே வந்து பார்த்து இது ஓலை என்று அறிகின்ற வரையில் அது அவனுக்கு மெய்ப்பொருளே. போனவன் திரும்ப வராமலே விட்டானானால் அவனுக்கு 'நான் கண்டது பாம்பு' என்ற அறிவும் அந்தப் பொருளும் மெய்யானவைகளே. எனவே முதலில் இருப்பதாகத் தோன்றி, பின்னர் இல்லாமற் போகும் பொருளுக்குப் பொய்ப்பொருள் என்று விளக்கம் கூறலாம். இவ்விளக்கம் முன்னே குறிப்பிடப்பெற்ற உண்மை (Truth) என்ற அடிப்படையில் காணப்பெற்றது.

இனி, இரண்டாம் வகை விளக்கத்தை ஏற்புடைமை என்ற அடிப்படையிற் காணலாம். உலகில் காணப்பெறும் பொருள்களின் நிலை. ஒருவனுடைய உடம்பு இளமையில் முறுக்கோடு வலிமை பெற்றிருந்தது. அதுவே முதுமைக் காலத்தில் நரை, திரை தோன்றி, அவனுக்கு ஒரு சுமையாகவே அமைந்து விடுகிறது. உடம்பினுடைய ஏற்புடைமை அல்லது மதிப்பீடு என்பது என்றும் நமக்கு இன்பம் தருவதாக இல்லை. நம்மோடு ஒத்துழைத்து, நமக்கு உறுதுணையாக இருந்த உடம்பு, காலப் போக்கில் நமக்கே சுமையாக மாறிவிடுவதை உணரும்போது மதிப்பீட்டு முறையில் உடம்பு பொய்ப்பொருளாகிறது.

உண்மை ஏற்புடைமை என்ற இருவகை இலக்கணங்களை ஆதாரங்களாகக் கொண்டு 'மெய்ப்பொருள்' என்பதற்கு விளக்கம் கண்டோம். இதற்குப் "பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருள்" என்ற திருவள்ளுவர் வாக்கே துணையாக நின்றது.

(3) இனி, திருவள்ளுவரே "நில்லாதவற்றை நிலையின என்றுணரும் புல்லறிவாண்மை" என்று குறிப்பிடுகின்றார். இங்கே அழிவு, அழிவற்ற தன்மை என்ற இரண்டன் அடிப்படையில் மெய்ப்பொருளை வரையறுக்கிறார்.

சைவசித்தாந்த அடிப்படையில் அல்லது விஞ்ஞான அடிப்படையில் எண்ணும்போது பொருள்களுக்கு அழிவு என்பது ஒத்துக்கொள்ளப் பெறவில்லை. மாற்றம் ஒத்துக்கொள்ளப் பெறுகிறது; அழிவு ஒத்துக்

கொள்ளப் பெறவில்லை என்பதை வரையறையாகக் கொள்ளவேண்டும். "தோற்றமும் ஒடுக்கமும் உள்ள தன்பாலே கிடத்தலின்" என்று கூறுவார் மெய்கண்டார். புத்தர் கண்ட தத்துவக் கொள்கையானது இடையறவுபடாத மாற்றமே நமக்கு 'நிலைத்தல்' என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது.

உலகம் மிக வேகமாகச் சுழல்கிறது. உலகில் வாழும் நாம் உலகம் சுழன்று கொண்டிருக்கிறது என்புதை உணர்வதில்லை.

பம்பரம் அதி வேகமாகச் சுற்றும்போது நிலைத்து நிற்பதாக நமக்குத் தோன்றுகிறது.

நிலையுடைமை, நில்லாமை என்ற கருத்துக்களை முன்னே கூறிய அளவையியல் முறைப்படி உண்மை, ஏற்புடைமை என்ற இரு அடிப்படைகளில் ஆராயலாம்.

உண்மை (Truth) என்ற அடிப்படையில் ஆராயும்போது 'என்றும் இருந்தபடி இருப்பது' எ்துவோ அது உண்மைப் பொருள்.

" பல்லுயிரும் பலவுலகும் படைத்து அளித்துத் துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
உன் உதரத்து உதித்தெழுந்து ஒன்று பல ஆயிடினும்
ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன்
சீர் இளமைத் திறம் "

என்ற சுந்தரம் பிள்ளையவர்களின் பாடல் மூலம் நிலைப்பொருள், நிலையாப் பொருள் என்பவைகளின் விளக்கங்களைக் காணலாம்.

இனி, 'ஏற்புடைமை' என்ற அடிப்படையில் காணும்போது கீழே குறிப்பிட்ட முறையிற் காணலாம்.

உலகம், இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் நம்மைப் பொறுத்த வரையில் நிலையுடையதே. நம்முடைய முன்னோர்கள் காலத்திலும் இப்படியே இருந்தது. நம்முடைய பின்னோர்கள் காலத்திலும் இது இப்படியே இருக்கும் என்ற கருத்தை அனுமானித்துக் கொண்டு, இது நிலையுடையது என்று கூறலாம். ஒரு காலத்தில் நிலைத்த மதிப்புடையது என்று கருதப்பெற்ற 'அன்ன சத்திரம் ஆயிரம் நாட்டல்' என்பது மதிப்பிழந்து "ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்பது பாரதியார் காலத்து நிலையுடையதாக அமைந்தது. இன்று அக்கருத்தும் எத்துணையளவு ஏற்புடையதாகும் என்பது ஆய்வுக்குரியது.

முடிப்புரை :

'மெய்ம்மை' என்பதன் பொருளை அளவையியல் அடிப்படையிலும், திருவள்ளுவரின் திருக்குறள் அடிப்படையிலும் நின்று சில கருத்துக்கள் எழுதப்பெற்றன, இவை பொதுநிலை ஆராய்ச்சிகள். திருவள்ளுவர் எதை 'மெய்ப்பொருள்' என்பதற்கு விளக்கமாகத் தருகிறார் என்பதைக் காணவேண்டும். அதற்கு அடுத்த கட்டுரை இடந்தரும்.

இராமாநுசர்

வித்துவான் திரு. கா. அ. மணவாளன், பி.ஏ., பி.ஓ.எல்.

(11)

இராமாநுசர் ஓராண்டுக்காலம் பெரிய திருமலைநம்பிகளிடம் இராமாயணத்தின் ஆழ்பொருள்களையெல்லாம் கேட்டு இன்புற்றார். அப்போது கோவிந்தப்பெருமாள் என்பவர் பெரியதிருமலைநம்பிகளிடம் மிக்க அன்புடையவராய் அவருக்குப் பலவகைத் தொண்டுகளைச் செய்து வந்தார். ஒருநாள் இரவு பெரிய திருமலைநம்பிகளுக்குப் படுக்கை அமைத்து, முந்துற அதில் தாம் படுத்துப் பார்த்தார். அவ்விதம் படுத்திருக்கும்போது இராமாநுசர் பார்த்துவிட்டார். 'என்னே இவருடைய செயல்' என்று வருத்தினார். ஆசாரியனுடைய படுக்கையில் படுத்துறங்கும் சீடனைப் பற்றி எச்சரிக்கையாக இருக்கும்படி பெரிய திருமலைநம்பிகளிடமும் கூறிவிட்டார். அதைக் கேட்ட பெரிய திருமலைநம்பிகள் உடனே கோவிந்தரைக் கூப்பிட்டு, "நமக்கு அமைத்த படுக்கையில் நீர் படுத்ததாக அறிகிறோம். அதற்குத் தண்டனை என்ன தெரியுமா? என்று கேட்டார். கோவிந்தரும் ஆசாரியன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, "ஆசாரியன் உள்ளம் வருந்தும்படி செய்பவனுக்கு நரகம்தான் கிடைக்கும் என்பது தெரியும். அடியேனுக்கு நரகம் அமையினும், தேவரீர் திருமேனியில் ஒன்றும் உறுத்துதல் இன்றி உறங்கப்பெற்றால் அதுவே எனக்கு மிக்க மகிழ்ச்சியாகும்" என்று கூறினார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த இராமாநுசருக்குக் கோவிந்தரிடம் அளவு கடந்த அன்பு உண்டாயிற்று. கோவிந்தருடைய ஆசாரிய பக்தியைப் போற்றினார்.

இராமாயண பாடம் கேட்டு முடித்த இராமாநுசருக்கு இராமனாலும் அவன் முன்னோர்களாலும் பெரிதும் போற்றிப் பூசிக்கப்பட்ட திருவரங்கச்செல்வனைக் கண்டு வணங்கவேண்டுமென்ற வேட்கை மிகுவதாயிற்று. இராமாநுசர், பின்பு பெரிய திருமலைநம்பிகளை வணங்கி விடைபெற்றுக் கொண்டார். அப்போது இராமாநுசருடைய வேண்டுகோளுக்கிணங்கக் கோவிந்தபட்டரையும் இராமாநுசருக்குத் தொண்டு செய்ய உடன் அனுப்பினார். இராமாநுசரும் கொவிந்தரும் மற்றும் சில சீடர்களுடன் புறப்பட்டுப் பெருமாள் கோயில் என்னும் திருக்கச்சியம் பதியை அடைந்தனர். அங்குப் பேரருளாளனையும் பெருந்தேவித் தாயாரையும் வணங்கிப், பிறகு திருக்கச்சிநம்பிகள் மடத்துக்குச் சென்று அவரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு திருவரங்கம் பெரிய கோயிலை அடைந்தனர்.

பெரிய கோயிலாகிய திருவரங்கத்தில் பழையபடி நம்பெருமாள் சந்நிதியில் திருவாய்மொழி முதலான திவ்வியப்பிரபந்தங்களுக்கு இராமாநுசர் உரை கூறிவந்தார். நாளுக்குநாள் சீடர்குழாம் பெருகிற்று. கோவிந்தப்பெருமாளுக்கு இராமாநுசர் கூறும் அரும் பொருள்களில் ஆழ்ந்தபற்று உண்டாயிற்று. ஒருவிதமான வைராக்கிய மனப்பான்மை

யும் உண்டாகிவிட்டது. திருமணமாகியிருந்தும் அவர் மனம் இல்லறத்தில் செல்லவில்லை. இராமாநுசரைப் போலவே தாமும் துறவு மேற்கொள்ளவிரும்பினர். இக்கருத்தை மெதுவாக இராமாநுசரிடமும் தெரிவித்தார். இராமாநுசரும் பல வகையால் அவர் மன உறுதியைச் சோதித்து முடிவில் அவருக்குத் துவராடையாகிய காவி உடையையும், முக்கோலாகிய திரிதண்டத்தையும் அளித்து வைணவத் துறவியாக்கினர். அதோடு தம்முடைய பெயர்களில் ஒன்ருன 'எம்பெருமானர்' என்ற திருப்பெயரையும் அவருக்கு அளித்து மகிழ்ந்தார். ஆனல் கோவிந்தரோ "தேவரீர் திருவடி நீழலில் ஒதுங்கிவாழும் அடியேனுக்கு இவ்வளவு பெரிய பெயரைத் தாங்கும் சக்தி உண்டோ?" என்று வினவினர். இராமாநுசரும் சற்று சிந்தித்து, "அப்படியாகில் அப்பெயரைச் சுருக்கி 'எம்பார்' என்று உமக்குத் திருப்பெயர் சாற்றுகிரேம்" என்று கூறினர். அன்று முதல் கூறத்தாழ்வான், முதலியாண்டான் போன்ற அன்புமிக்க சீடர்கள் வரிசையில் எம்பாரும் சேர்க்கப்பட்டார்.

திருப்பாவை சீயர்; இராமாநுசரைத் திருப்பாவை சீயர் என்று கூறுவதுண்டு. கோதை நாச்சியாராகிய ஆண்டாள் அருளிச்செய்த திருப்பாவையில் இராமாநுசருக்கு மிகவும் ஈடுபாடு உண்டு. இவர் பெரிய மடாதிபதியாக இருந்தும் தாம் மேற்கொண்ட துறவு நெறிக்கு ஏற்ப நாள்தோறும் சில இல்லங்களுக்குச் சென்று பிட்சை எடுத்துப் பசி தீர்த்துக் கொள்வார். அவ்வாறு பிட்சை ஏற்கச் செல்லும்போது திருப்பாவை முப்பது பாட்டையும் பக்தியோடு சொல்லிக் கொண்டே போவது வழக்கம். ஒருநாள் இவர் திருப்பாவையின் 18வது பாசுரமான 'உந்து மதகளிற்றன்' என்று தொடங்கும் பாடலைச் சொல்லிக் கொண்டே பெரியநம்பிகளின் திருமாளிகை வாசலை அடைந்தார். அப்போது பெரியநம்பிகளின் திருமாளிகை வாசற் கதவு சாத்தப்பட்டிருந்தது. இராமாநுசர் அந்த வாசற் கதவருகே நின்று அப்பாடலின் பிற்பகுதியான,

பந்தார் விரலி! உன்
மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால்
சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய்
மகிழந்து ஏலோரெம்பாவாய்.

என்ற வரிகளைக் கூறிக்கொண்டிருந்தார். அந்த நேரத்தில் உள்ளே பந்து விளையாடிக் கொண்டிருந்த பெரியநம்பிகளின் திருமகளான அத்துழாய் என்ற பெண், இராமாநுசருடைய திருவாக்கினைக் கேட்டாள் ஓடி வந்து கதவைத் திறந்தாள். அவ்வளவுதான். மணிக்கதவம் திறந்து வளையல்கள் ஒலிக்க வந்து நின்ற பெண்மணியைக் கண்ட இராமாநுசர் தாம் சொல்லி வந்த திருப்பாவைப் பாடலின் பொருளான நப்பின்னைப் பிராட்டியே எதிரில் நிற்பதாக உணர்ந்தார். மயங்கி அப்படியே பிட்சைப் பாத்திரத்தோடு வீழ்ந்து விட்டார். உடனே அத்துழாய் பதைபதைத்து உள்ளே ஓடிச் சென்று பெரியநம்பிகளிடம் நடந்ததைக் கூறினள். தாம் கதவைத் திறந்தவாறே இராமாநுசர் தம்மைக் கண்டு மூர்ச்சித்து வீழ்ந்ததை உருக்கமாகக் கூறினள். காரணம் தெரியாமல் திகைத்தாள்.

பெரியநம்பிகள் பந்தும் கையுமாய் நிற்கும் தம் மகளை ஒரு கணம் கூர்ந்து நோக்கினர். அவள் செந்தாமரைக் கையசைவில், சீருர் வளை ஒலிப்பதைக் கேட்டார். மணிக்கதவம் தாள் திறக்கப்பெற்றதையும்

இணைத்துப் பார்த்தார். பளிச்சென்று அவருக்குப் புரிந்துவிட்டது. 'ஆகா! இப்படியும் ஒரு அனுபவமா? இராமாநுசர் இப்படித் திருப்பாவையை அனுபவிப்பது போல் நமக்கு அனுபவம் இல்லையே' என்று வருந்தினர். திருப்பாவை சீயரான இராமாநுசர்தான் அங்கு வாசலில் வந்திருக்கவேண்டுமென்று ஊகித்துக் கொண்டார். பிறகு அத்துழாயை நோக்கி "கண்ணே! உந்துமதகளிற்றன் ஓடாத தோள்வலியன்" என்ற திருப்பாவைப் பாசுரத்தை நம்மிராமாநுசர் அனுசந்தித்து வந்தார் போலும். உன்னை அவர் நப்பின்னையாகவே கருதி மூர்ச்சித்து இருக்கவேண்டும் "விரைந்து வா, நம் திருப்பாவை சீயரை அழைத்து வருவோம்" என்று சொல்லி வாசலில் மூர்ச்சித்துக் கிடக்கும் இராமாநுசரை உள்ளே அழைத்துச் சென்றுர். இந் நிகழ்ச்சிக்குப்பின் அத்துழாய்க்கு இராமாநுசரிடம் அளவு கடந்த பக்தி உண்டாகியது. உடன் பிறந்த அண்ணனுகக் கருதித் தொண்டு செய்யலானுள்.

இராமாநுசருக்கும் அத்துழாயிடம் அதிக அன்பு உண்டாயிற்று. அத்தங்கையாகிய அத்துழாய்க்கு இராமாநுசரின் ஆசியும் அனுதாபமும் சிறப்பாகக் கிடைத்தன.

அதனுல்தான் பின்பு புக்ககத்தில் அதிக அன்போ அனுதாபமோ இல்லாத காலத்தில் முதலியாண்டானை இந்த அத்துழாயின் வீட்டுச் சீதனவெள்ளாட்டியாக (பணியாளாக) இராமாநுசர் அனுப்பி உதவினுர்.

அரிசனத் தொண்டு: ஆளவந்தாருடைய சீடர்களில் மாறனேரி நம்பி என்பவரும் ஒருவர். இவர் அரிசன வகுப்பைச் சேர்ந்தார். அக் காலத்தில் தீண்டத்தகாதவர்கள் என்று கருதப்பட்ட கீழ்க்குலத்தில் தோன்றியவர். ஆனுலும் ஆளவந்தார் இவரைக் குலம் கருதித் தாழ்ந்தவராகக் கொள்ளாமல் பெரியநம்பி போன்ற உயர்ந்த குலச் சீடர்களோடு சமமாகவே எண்ணி உபதேசங்களைச் செய்துள்ளார். இப்படி ஆளவந்தாருடைய அருளுக்கு இலக்காகி அவரடித் தொண்டரா யிருந்தும் கூடச் சில சீரங்கத்து வைணவர்களாலே இம் மாறனேரி நம்பி ஒதுக்கிவைக்கப்பட்டார். ஆனுல் பெரியநம்பிகள் போன்ற மகான்கள் இம் மாறனேரி நம்பிகளிடம் அதிகமான நட்பும், பாசமும் வைத்துப் பழகியுள்ளார்கள்.

இம் மாறனேரிநம்பி ஊரால் இப்பெயர் பெற்றவராகிறுர். மாறனேரி என்பது இவருடைய ஊராகும். அல்லது மாறன் என்ற நம்மாழ் வாருக்கு நிகரானவர் என்ற பொருளில் மாறனேர் நம்பி என்றும் அழைக்கப்பட்டிருக்கலாம். இவர் இளமை முதலே திருமால் பக்தி மிக்கவராய் விளங்கினுர். ஆளவந்தாரைச் சரணடைந்து அரும்பெரும் பொருள்களைக் கேட்டு உணர்ந்த உத்தமராவார். மிக்க வைராக்கிய முடையவராயும் விளங்கினுர். பெரியநம்பிகளுக்கு என்றுமே இவரிடம் அதிக பாசம் உணடு.

மாறனேரிநம்பி ஒரு சமயம் நோய்வாய்ப் பட்டிருந்தார். தாமாகவே அமைத்துக் கொண்டிருந்த ஒரு குடிலில் இவர் தனிமையில் யாரிடமும் சொல்லாமல் திருவரங்கனையே நினைந்து, அவன் நாமங்களைப் பிதற்றி வந்தார். இந்தச் செய்தி எப்படியோ பெரிநம்பிகளுக்குத் தெரிந்து விட்டது. உள்ளம் பதைத்தார். ஓடோடி வந்து மாறனேர் நம்பிக்குப் பணி செய்தார். அத்துழாய் அருமையாய்ச் சமைத்துக் கொடுத்த உணவினைக் கொஞ்சம் கொஞ்சமாக மாறனேரி நம்பிக்கு ஊட்டி உடம்பைத் தேற்றினுர்.

இந்தச் செய்தி இராமாநுசருக்குத் தெரிந்து விட்டது. பெரியநம்பிகளின் திருமேனியில் கண்ணும் கருத்துமாய் இருக்கிற இராமாநுசர், அப்பெரியநம்பியால் பெரிதும் விரும்பப்படும் மாறனேர்நம்பியைக் காண ஆவல் கொண்டார் அதற்கு ஏற்றாற்போல் ஒருநாள் பெரியநம்பி மாறனேரி நம்பிக்கு உணவு கொண்டு செல்வதற்கு நேரமாகி விட்டது. இரவு வேளையாக இருந்தது. அந்த நேரத்தில் பெரியநம்பிகள் உணவை எடுத்துக்கொண்டு மாறனேர்நம்பியின் குடிலுக்குப் புறப்பட்டார். இது தான் சமயம் என்று பெரியநம்பிகளின் திருமேனிக் காவலாக அவருக்குத் தெரியாமல் அவர் பின்னாலே ஒதுங்கி ஒதுங்கிச் சென்றார். பெரியநம்பிகள், இராசரண நோயினால் வருந்தும் மாறனேர் நம்பியின் திருமேனியைத் துடைத்து, பச்சிலை மருந்திட்டுக் கட்டிப் பின்பு அவருக்கு உணவு பரிமாறி மகிழ்வதை இராமாநுசர் மறைந்து நின்று கவனித்தார். இதுவன்றோ! அடியார் தொண்டு என்று போற்றி மெய்ம்மறந்து நின்றார். கண்ணீர் உகுத்தார்.

இவ்விதம் மாறனேர்நம்பி உணவு உண்டபின் 'ஆளவந்தார் திருவடிகளே தஞ்சம்' என்று சொல்லிக் கண் வளர்ந்தருளுகையில் பெரிய நம்பிகள் விடைபெற்றுக் கொண்டுத் தம் வீட்டுக்குப் புறப்பட்டார். அப்போது சிறிது இருள் நீங்கி நிலவு தோன்றியது. இராமாநுசருடைய நிழல் எப்படியோ பெரியநம்பிகளின் கண்களில் பட்டுவிட்டது. கொஞ்சம் உற்றுநோக்கியவுடன், அந்நிலவில் அதிக அழகுடன் மிகவும் கம்பீரமாய் காவி ஆடை ஒளிரச் செல்பவர் இராமாநுசரே என்பதைத் தெரிந்து கொண்டார். எனினும் ஒன்றும் தெரியாதவர்போல் இருந்து விட்டார்.

இப்படிப் பலநாள் உதவி செய்தும்கூட மாறநேர்நம்பியின் உடல் குணமாகவில்லை. ஒருநாள் பரம்பதமடைந்து விட்டார். செய்தியறிந்ததும் கண்களில் நீர்பெருக அத்துழாயோடு பெரியநம்பிகளும், இராமாநுசரும் சென்று புலம்பியழுது அரற்றினர். இறுதியில் உத்தமர்களுக்குச் செய்யவேண்டிய முறைப்படி அம்மாறனேர் நம்பிக்குப் பெரியநம்பிகள் இராமாநுசரின் துணையோடு பிரமமேத சம்ஸ்காரத்தை, (சாதி, கல்வி முதலியவைகளால் உயர்ந்தவர்களுக்குச் செய்யப்படும் இறுதிக்கடன்) தன் கையாலேயே செய்து முடித்தார்.

இவ்விதம் மாறனேர்நம்பிக்குப் பெரியநம்பிகள் ஈமக்கடன்களைச் செய்தது குறித்துத் திருவரங்கத்தில் பலர் குழப்பம் அடைந்து, பெரிய நம்பிகளைப் பழித்தும் பேசினார்கள். ஆனால் அதற்கெல்லாம் சிறிதும் கவலைப்படாமல் செய்வினை தீர்த்த செம்மலாகவே பெரியநம்பிகள் திகழ்ந்தார். இதுகுறித்துத் திருவரங்கத்தில் பேசப்படுவதை இராமாநுசர் பெரியநம்பிகளிடம் கேட்டபொழுது நம்பிகள் இவ்வாறு பதிலுரைத்தார்.

"என் அன்புக்கு உகந்த சீடரே! இராமாநுசரே! முன்பு இராமபிரான் சடாயு என்ற கழுகரசனுக்குத் தன் கையாலேயே அந்திமக்கடனைச் செய்தான். அந்த இராமனைக் காட்டிலும் நான் பெரியவனோ! அல்லது சடாயுவைக் காட்டிலும் மாறனேர்நம்பி தாழ்ந்தவரோ! கூறுவீராக! அன்றியும் ஒரு எளிய பணிப்பெண்ணின் மகனான விதுரனுக்குத் தரும புத்திரன் ஈமக்கடன் செய்தான், அத்தருமரைக் காட்டிலும் நான் பெரியவனா! அல்லது அந்த விதுரரைக் காட்டிலும் மாறனேர்நம்பி தாழ்ந்தவரா" என்று, பல விளக்கங்களைக் கூறியதோடு, "பிறப்பால் சாதி உயர்வு தாழ்வு இல்லையென்ற ஆழ்வார்களின் அருளிச் செயல்களை நீர் அறியீரோ" என்றும் விளக்கம் கூறினார். (தொடரும்)

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் புராணம்

கொற்றவன்குடி உமாபதிசிவம் அருளிச்செய்த மூலமும்

திருக்கயிலாய பரம்பரைத் திருவண்ணுமலை ஆதீனம்
ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் அருளிய பதவுரையும்

பிரதி செய்தவர்: சேக்கிழார்தாசன் இராமசேஷன்

தாயனு ரிளையான்றன் குடிமாற ரரசு
சாக்கியர்கஞ் சாறர்விறன் மிண்டர்முனை யடுவார்
ஏயர்கோன் கலிக்காமர் கோபாலர் மரபில்
இருவர்திரு மூலனு ராணுயர் குயவர்
சேயபுகழ்த் திருநீல கண்டனுர் பாணர்
திருமரபிற் றிருநீல கண்டத்துப் பாணர்
மேயதிற லதிபத்தர் பரதவர் கண்ணப்பர்
வேடர்மர பினிற்சான்ரு ரேனுதி நாதர். 40

(இ-ள்): தாயனுர் இளையான்றன் குடிமாறர்—அரிவாட்டாய நாயனுர் இளையான் குடிமாற நாயனுர்; அரசு சாக்கியர் கஞ்சாறர்-திருநாவுக்கரசு சுவாமிகள் சாக்கியநாயனுர் மானக்கஞ்சாற நாயனுர்; விறன் மிண்டர் முனையடுவார்-விறன்மிண்ட நாயனுர் முனையடுவார் நாயனுர்; ஏயர்கோன் கலிக்காமர்-ஏயர்கோன் கலிக்காம நாயனுர் ஆகிய இவர் புராணங்களாம்; திருமூலராணுயர்-திருமூல நாயனுர் ஆனுயநாயனுர் என; கோபால மரபிலிருவர்—ஆயர்குலத்தவர் புராணம் இரண்டாம்; குயவர்-குயவர் குலத்தவராகிய; சேயபுகழ்த் திருநீலகண்டனுர்—செவ்விதாகிய புகழையுடைய திருநீலகண்ட நாயனுர்; பாணர் திருமரபில்-பாணர்கள் சிறந்த மரபில்; திருநீலகண்டத்துப்பாணர்-திருநீலகண்டத்துப்பாண நாயனுர்; பரதவர்-பரதவர்கள் குலத்தில்; மேயதிறலதிபத்தர்-வெற்றி பொருந்திய அதிபத்த நாயனுர்; வேடர் மரபினில்-வேடர்கள் குலத்தில்; கண்ணப்பர்-கண்ணப்ப நாயனுர்; சான்ருர் குலத்தில் ஏனுதிநாதர்-ஏனுதிநாத நாயனுர். (எ—று).

நேசனுர் சாலியரிற் றிருநாளைப் போவார்
நீசர்மர பினிலெங்க டிருக்குறிப்புத் தொண்டர்
தூசொலிக்கு மேகாலி மரபுதில தயிலத்
தொழின்மரபிற் கலியனுர் மரபுகுறித் துரையாக்
காசில்கதை பதின்மூன்று குலச்சிறையார் தண்டி
கணம்புல்ல ரெறிபத்தர் காரியார் குறும்பர்
தேசுடைய பத்தர்பர மனைப்பாடு வார்கள்
சித்தத்தைச் சிவன்பால்வைத் தாராரூர்ப் பிறந்தார். 41

(இ-ள்): சாலியரினேசனுர்-சாலிய குலத்தவராகிய நேசநாயனுர்; நீசர்மரபினிற் றிருநாளைப்போவார்-பஞ்சமர் குலத்தவராகிய திருநாளைப் போவார் நாயனுர்; தூசொலிக்கு மேகாலி மரபு-கலை வெளுக்கும் வண்ணுர் மரபினராகிய; எங்கள் திருக்குறிப்புத் தொண்டர்-எமது திருக்குறிப்புத் தொண்ட நாயனுர்; திலதயிலத் தொழின் மரபில்-எண்ணெய் தொழிலையுடைய செக்கார் குலத்தவ ராகிய; கலியனுர்-கலியநாயனுர் (என்று இவர்கள் புராணம் தனித் தனி ஒவ்வொன்ருகி) மரபு குறித்துறையாக்காசில் கதை பதின்மூன்று-மரபினைக் குறித்துச் சொல்லாத நல்லபுராணம பதின்மூன்று (அவை யாவன); குலச்சிறையார் தண்டி கணம்புல்லர்-குலச்சிறை நாயனுர் தண்டியடிகள்நாயனுர் கணம்புல்ல நாயனுர்; எரிபத்தர் காரியார் குறும்பர்-எறிபத்தநாயனுர் காரிநாயனுர் பெருமிழலைக் குறும்ப நாயனுர்; தேசுடைய பத்தர் பரமனைப் பாடுவார்கள்-ஞானப்பிர காசத்தையுடைய பத்தராய்ப் பணிவார்; பரமனையே பாடுவார்; சித்தத்தைச் சிவன்பால் வைத்தாராரூர்ப் பிறந்தார்-சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்கள் திருவாரூர்ப் பிறந்தவர்கள். (எ-று).

செப்பரிய பொய்யடிமை யில்லாதார் மெய்யிற்
திருநீறு பூசிமுனி வர்களுலகு தன்னில்
அப்பாலு மடிச்சார்ந்தா ரிவர்கடமிற் சிலபே
ராய்ந்ததமிழ்ப் பேர் சிலபேர் மலையாளர் சிலபேர்
தப்பாத தெலுங்கர்சிலர் மற்றுள தேசத்தோர்
தவஞ்செய்து பரகதியை யடைந்தவர்கள் சிலபேர்
இப்போது மிருந்தரனை வழிபடுவோர் சிலபேர்
இனிமேலுந் திருமேனி கொடுவருவோர் சிலரே. 42

(இ-ள்): செப்பரிய பொய்யடிமை யில்லாதார்-சொல்லுதற்கரிய பொய்யடிமையில்லாத புலவர்கள்; மெய்யிற் றிருநீறு பூசி முனிவர்கள்-திருமேனி முழுதுந் திருநீறு பூசும் முனிவர்கள்; உலகு தன்னில் அப்பாலும் அடிச்சார்ந்தார்-இவ்வுலகத்தில் அப்பாலு மடிச்சார்ந்தா ராகிய இவர் புராணங்களாம்; இவர்கடமிற் சிலபேர் மலையாளர்-சிலர் மலையாள தேயத்தோர்; சிலர் மற்றுள தேசத்தோர்-சிலர் மற்ற தேசத் திலுமுள்ளவர்களாம்; தவஞ்செய்து பரகதியை யடைந்தவர்கள் சில பேர்; இப்போது மிருந்தரனை வழிபடுவோர் சிலபேர்-இக்காலத்திலு மிருந்து சிவபிரானுக்குத் தொண்டு செய்பவர்கள் சிலபேர்; இனி மேலுந் திருமேனி கொடுவருவோர் சிலர்-இனிமேலும் அவதாரஞ் செய்து வருபவர்கள் சில பேர்களாம். (எ-று). ஏ-அசை. இவ்வைந்துங் குளகம்.

தொகையடியார்களில் முத்திபெற்ருரொழிய இப்பொழுது மிருந்த ரனை வழிபடுவோரும் இனிமேலுந் திருமேனி கொடுவருவோரும் தில்லை வாழந்தணர், பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பால் வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார், முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார் முழுநீறு பூசிய முனிவர், அப்பாலுமடிச்சார்ந்தார் என்னுமிவர்களேயாம்.

திருஞான சம்பந்தர் திருநாவுக் கரையர்
திருமூலர் நெடுமாறர் மங்கையருக் கரசி
கரைசேருங் குலச் சிறையார் யாழ்ப்பாணர் குறும்பர்
கணநாத ரப்பூதி சோமாசி மாறர்
உரைசேரு மிவர்கள்பதி னெருவர்குரு வருளால்
உயர்முத்தி யடைந்தவர்க ளெறிபத்தர் கலயர்
முருகனுர் கண்ணப்ப ராணுயர் தாயர்
மூர்த்தியார் சண்டேசர் திருநாளைப் போவார். 43

(இ-ள்) திருஞானசம்பந்தர் திருநாவுக்கரையர்—திருஞானசம்பந்த சுவாமிகளும் திருநாவுக்கரசு சுவாமிகளும்; திருமூலர் நெடுமாறர் மங்கையருக்கரசி-திருமூல நாயனுரும் நின்றசீர் நெடுமாற நாயனுரும் மங்கையர்க்கரசியாரும்; கரைசேருங் குலச்சிரையார்-முத்தியாகிய கரையையடைந்த குலச்சிறைநாயனுரும்; யாழ்ப்பாணர் குறும்பர்-திருநீலகண்டயாழ்ப்பாணரும் பெருமிழலைக் குறும்ப நாயனுரும்; கணநாதர் அப்பூதி சோமாசிமாறர்-கணநாத நாயனுரும் அப்பூதியடிகளும், சோமாசிமாற நாயனுரும் ஆகிய; உரைசேருமிவர்கள் பதினெருவர்-புகழையுடைய இவர்கள் பதினெருவரும்; குருவருளால் உயர்முத்தி அடைந்தவர்கள்—குருவருளினுல் பரமுத்தியை அடைந்தவர்கள்; எறிபத்தர் கலயர் முருகனுர் கண்ணப்பர்-எறிபத்த நாயனுரும் குங்குலியக்கலய நாயனுரும் முருகநாயனுரும் கண்ணப்ப நாயனுரும்; ஆனுயர் தாயர் மூர்த்தியர்-ஆனயநாயனுரும் அரிவாட்டாய நாயனுரும் மூர்த்தி நாயனுரும்; சண்டேசர் திருநாளைப்போவார்—சண்டேச நாயனுரும் திருநாளைப் போவார் நாயனுரும். (எ—று).

சேரனுர் சாக்கியனுர் கூற்றுவனுர் தண்டி
சிறப்புலியார் பசுபதியார் கலிக்காமர் கலியர்
காரியார் அதிபத்தர் நீலநக்கர் பூசல்
கணம்புல்லர் கோட்புலியார் நமிநந்தி யடிகள்
சீருடைய கழற்சிங்கர் வாயிலார் தூய
செருத்துணையார் புகழ்த்துணையார் காடவரை யடிகண்
மூரிநெடு வேற்செங்கட் சோழனு ராக
முப்பதுபேர் சிவலிங்கத் தான்முத்தியடைந்தோர். 44

(இ-ள்): சேரனுர் சாக்கியனுர் கூற்றுவனுர் தண்டி—சேரமான் பெருமாள் நாயனுரும் சாக்கிய நாயனுரும் கூற்றுவ நாயனுரும் தண்டியடிகள் நாயனுரும்; சிறப்புலியார் பசுபதியார் கலிக்காமர் கலியர்-சிறப்புலி நாயனுரும் உருத்திரபசுபதி நாயனுரும் கலிக்காம நாயனுரும் கலியநாயனுரும்; கரியார் அதிபத்தர் நீலநக்கர் பூசல்—காரிநாயனுரும் அதிபத்த நாயனுரும் நீலநக்க நாயனுரும் பூசலை நாயனுரும்; கணம்புல்லர் கோட்புலியார் நமிநந்தியடிகள் நாயனுரும்; சீருடைய கழற்சிங்கர் வாயிலார்—சிறப்பினையுடைய கழற்சிங்க நாயனுரும் வாயிலார் நாயனுரும்; தூய செருத்துணையார் புகழ்த்துணையார்—சுத்தம் பொருந்திய செருத்துணை நாயனுரும் புகழ்த்துணை நாயனுரும்; காடவரையடிகள்-ஐயடிகள் காடவர்கோன் நாயனுரும்; மூரிநெடுவேற் செங்கட் சோழனுராக-வலிமையுள்ள வேலாயுதத்தை யுடைய கோச்செங்கட் சோழ நாயனுரும் என்று; முப்பதுபேர் சிவலிங்கத்தான் முத்தியடைந்தோர்—இம்முப்பது பேர்களும் சிவலிங்கத்தால் முத்தியடைந்தவர்கள். (எ—று). இவ்விரண்டுங் குளகம்.

திருநீல கண்டனர் இயற்பகையார் மூர்க்கர்
சிறுத்தொண்டர் திருக்குறிப்புத் தொண்டர்விறன் மிண்டர்
அருள்சேரு மிடங்கழியார் முனையடுவார் சத்தி
யமர்நீதி மெய்ப்பொருளா ரேனாதி நாதர்
கரைசேரும் புகழ்ச்சோழர் கஞ்சாறர் மாறர்
காரைக்கா லம்மைநர சிங்கர்கலிக் கம்பர்
வருநேச ராகவொரு பத்தொன்ப தடியார்
மணிவேடத் தாரைவழி பட்டரனை யடைந்தோர். 45

(இ-ள்): திருநீலகண்டனர் இயற்பகையார் மூர்க்கர்-திருநீலகண்ட நாயனாரும் இயற்பகை நாயனாரும் மூர்க்க நாயனாரும்; சிறுத்தொண்டர் திருக்குறிப்புத் தொண்டர் விறன்மிண்டர்-சிறுத்தொண்ட நாயனாரும் திருக்குறிப்புத் தொண்ட நாயனாரும் விறன்மிண்ட நாயனாரும்; அருள் சேருமிடங்கழியார் முனையடுவார்சத்தி-அருளைப்பெற்ற இடங்கழி நாயனாரும் முனையடுவார் நாயனாரும் சத்தி நாயனாரும்; அமர்நீதி மெய்ப்பொருளார் ஏனாதிநாதர்-அமர்நீதி நாயனாரும் மெய்ப்பொருள் நாயனாரும் ஏனாதிநாத நாயனாரும்; கரைசேரும் புகழ்ச்சோழர் கஞ்சாறர் மாறர்-முத்தியாகிய கரையை யடைந்த புகழ்ச்சோழ நாயனாரும் மானக்கஞ்சாற நாயனாரும் நின்றசீர் நெடுமாற நாயனாரும்; காரைக்காலம்மை நரசிங்கர் கலிக்கம்பர்-காரைக்காலம்மையாரும் நரசிங்கமுனையரையரும் கலிக்கம்ப நாயனாரும்; வருநேசராக வொரு பத்தொன்பதடியார்-மெய்யன்பு கைவந்த நேசநாயனாருமாகிய இப் பத்தொன்பது நிலைமையான பேர்களும்; மணி வேடத்தாரை வழி பட்டரனையடைந்தோர்-சிவனடியார்க்குத் தொன்டு செய்து முத்தி யடைந்தவர்கள். (எ-று).

கவுனியர்நா வுக்கரசர் பேயா ரிம்மூவர்
கற்குமிய லிசைவல்லோ ரிசைத்தமிழ்நூல் வல்லோர்
பவமணுகாத் திருநாளைப் போவாராணயர்
பாணர்பர மனைப்பாடு வாராக நால்வர்
புவனிபுக ழையடிக டிருமூலர் காரி
பொய்யடிமை யில்லாத தமிழ்ப்புலவர் சேரர்
நவமுடைய விவரைவ ரியல்வல்லோர் நின்ற
நாயன்மார் தவம்புரிந்து நற்கதியை யடைந்தோர். 46.

(இ-ள்): கவுனியர் நாவுக்கரசர் பேயார் இம்மூவர்-திருஞானசம்பந்த சுவாமிகளும் அப்பர் சுவாமிகளும் காரைக்காலம்மையாருமாகிய இம் மூவர்கள்; கற்குமியலிசைவல்லோர்-கற்கும்படியான இயற்றமிழிலும் இசைத்தமிழிலும் வல்லவர்களாம்; பவமணுகாத் திருநாளைப் போவார் ஆனயர்-பிறவித் தடுமாற்றத்தையடையாத திருநாளைப் போவார் நாயனாரும் ஆனய நாயனாரும்; பாணர் பரமனைப்பாடுவாராக நால்வர்-திருநீலகண்ட யாழ்ப்பாணரும் பரமனைப்பாடுவார்களுமாகிய இந்நால் வர்; இசைத்தமிழ் நூல்வல்லோர்-இசைத்தமிழில் வல்லவர்களாம் புவனிபுகழ் ஐயடிகள் திருமூலர்காரி-உலகத்தார் புகழா நின்ற ஐயடி கள் காடவர்கோன் நாயனாரும் திருமூல நாயனாரும் காரிநாயனாரும்; பொய்யடிமையில்லாத தமிழ்ப்புலவர் சேரர்-பொய்யடிமையில்லாத தமிழ்ப்புலவரும் சேரமான் பெருமாள் நாயனாருமாகிய; நவமுடைய விவரைவரியல்வல்லோர்-சிறப்பையுடைய இவ்வைவர் இயற்றமிழில் வல்லவர்களாம்; நின்ற நாயன்மார் தவம் புரிந்து நற்கதியை யடைந்தோர்-மற்ற நாயன்மார்கள் திருத்தொண்டு செய்து மேலான முத்தியை யடைந்தவர்கள். (எ-று). (தொடரும்)



அழுதடியடைந்த அன்பர்

க. கலியாணம், எம்.ஏ., டிப். எக்கான்..

"யானே பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய் ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்பது மாணிக்கவாசகர் திருவாக்கு. அவரைப் போற்றிப் புகழ்ந்த சான்றோர் அவரை "அழுதடியடைந்த அன்பர்" என்று கூறினர். மாணிக்கவாசகர் வரலாறு யாவரும் அறிந்ததொன்று. மதுரைக்குப் பதினைந்து கல் தொலைவிலுள்ள திருவாதவூரில் அவர் தோன்றினார். இளமையிலேயே எல்லாக் கலைகளையும் கற்றுச் சிறந்து விளங்கினார். மதுரையை ஆண்ட அரிமர்த்தன பாண்டியன் தனக்கு அமைச்சராக அவரை அமர்த்தினான். பெரும் பொருள் பெற்று குதிரை வாங்கச் சென்ற அமைச்சர் அப்பொருளை அடியவர்கட்கும் கோயில் கட்டுவதற்கும் செலவிட்டார். ஆவணி மூலத்தன்று குதிரைகள் வரும் என்று அமைச்சர் அரசனுக்கு அறிவித்தார். சிவபெருமான் நரிகளைக் குதிரைகளாக்கி ஆவணி மூலத்தன்று கொண்டு வந்து சேர்த்தார். அன்றிரவே அவை மறுபடியும் நரிகளாகி ஓடி விட்டன. அரசன் சினங்கொண்டு மாணிக்கவாசகரை வையையாற்றின் சுடு மணலில் நிறுத்திக் கடுந்தண்டனை கொடுத்தான். வையையில் வெள்ளம் பெருகி, உடைப்பெடுத்து, ஊருக்குள் புகுந்தது. உடைப்புக்களை யடைக்கும்படி அரசன் மக்களுக்கு ஆணையிட்டான். ஆலவாய் அண்ணல் வந்தி என்னும் பிட்டு வாணிச்சிக்குக் கூலியாளாக வந்து, அந்தப் பகுதி உடைப்பை யடைக்காமல் இருந்தார். இதைக்கண்ட அரசன் அவரைப் பிரம்பால் அடித்தான். அந்த அடி எல்லா உயிர்கள் மேலும் பட்டது. இறைவன் மறைந்தார். வெள்ளமும் மறைந்தது. பாண்டியன் மாணிக்கவாசகர் பெருமையையறிந்து வணங்கினான். அவர் அமைச்சர் பதவியினின்றும் நீங்கி, திருப்பெருந்துறை, உத்தரகோசமங்கை, திருஇடைமருதூர், திருவண்ணாமலை, காஞ்சி முதலிய தலங்களை வழிபட்டு, திருவாசகப் பாடல்களைப் பாடி, தில்லை வந்தடைந்தார். திருக்கோவையார் என்ற நூலையும் பாடினார். திருவாசகத்தின் பொருள் என்னவென்று அன்பர்கள் கேட்க, மாணிக்கவாசகர் அவர்களை அழைத்துச் சென்று தில்லைக்கூத்தனைச்சுட்டி அவனே பொருள் எனக்காட்டி அவன் திருவடியில் ஆனிமகத்தன்று இரண்டறக் கலந்தார்.

அவர் வாழ்ந்த காலத்தைப் பற்றிப் பல ஆராய்ச்சி நூல்கள் எழுந்துள்ளன. கி.பி. மூன்ரும் நூற்ருண்டு முதல் கி.பி. பத்தாம் நூற்ருண்டு வரையுள்ள நூற்ருண்டு ஒன்றில் இருந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் பல திறப்பட்ட கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். என்ருலும் இறுதியான முடிவு எதுவும் உறுதியாக எடுக்கப்படவில்லை.

திருவாசகத்தில் 51 திருப்பதிகங்களும் 658 பாடல்களும் உள்ளன. அவர் அருளிய திருக்கோவையாரில் 400 பாசுரங்கள் இருக்கின்றன இவ்விரண்டையும் ஆன்ருேர் எட்டாம் திருமுறையாக வகுத்துள்ளனர்.

திருவாசகத்தின் சிறப்பியல்களைப் பற்றி நாம் ஒரு சிறிது அறிந்து கொள்வது நலம். இறைவன் ஒரு மறையவர் வடிவில் வந்து மாணிக்க வாசகர் சொல்ல, திருவாசகம் முழுமையும் தம் திருக்கரங்களால் எழுதி, அழகிய திருச்சிற்றம்பலமுடையான் என்று கையெழுத்திட்டார். இந்த நிகழ்ச்சியை வைத்தே மனேன்மணிய நாடகாசிரியர் சுந்தரம்பிள்ளை "ஊழிக்காலத்தில் தன் தனிமையைப் போக்கிக் கொள்ளத் திருவாசகத்தின் பிரதியை வைத்துக்கொண்டார்" என்று கற்பனை நயம்படக் கூறியிருப்பது அற்புதமானது. மேல்நாட்டு அறிஞர் போப் என்பவர் அவர் மொழியெர்த்த மூன்று நூல்களில் இரண்டு, நீதி நூல்கள்; நாலடியார் திருக்குறள் என்பன; திருவாசகம் என்ற சமய நூல் ஒன்று. திருவாசகத்தின் பெருமை பல நூற்ருண்டுகளுக்கு முன்பே கடல் கடந்து பரவியிருக்கிறது. சயாம் அரசர் முடிசூட்டு விழாவில் பாடப்பெறும் மரபு தோன்றியது. "திருவாசகத்துக்கு உருகார் ஒருவாசகத்துக்கும் உருகார்" என்ற பழமொழி நாடறிந்தது. திருவாசகம் இங்கு ஒருகால் ஓதினுல் கருங்கல் மனமும் கனியும் என்பதற்கையமில்லை. வடலூர் இராமலிங்க அடிகளார் திருவாசகத்தில் மிக்க ஈடுபாடு கொண்டவர். யாரேனும் திருவாசகம் பாடக்கேட்டால் அங்கேயே கண்ணீரும் கம்பலையுமாக நின்று விடுவாராம். "வான்கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை "நான் கலந்து பாடுங்கால்" என்று எழுதிக் கொண்டு வந்தவர் "நான் கலந்து பாடுங்கால்" என்பதைப் பல மணி நேரம் சொல்லிக்கொண்டேயிருந்து பின்னரே பாட்டை முடித்தார் என்ற ஒரு செவிவழிச் செய்தியையும் நாம் கேள்விப்படுகிருேம். "பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என்று இறைவனே விரும்பியதாகவும் நாம் அறிகிருேம்.

கண்ணப்பர், சண்டேசர் முதலிய அடியார்களைப் பற்றிக் கூறுகிருர், இராவணன் மனைவி மண்டோதரிக்கு அருள் செய்ததைக் குறிக்கிருர். ஐந்தெழுத்தைப்பற்றி விதந்து பேசுகிருர். 'நமச்சிவாய வாழ்க' என்ற தொடங்குகிருர். 'நானேயோ தவம் செய்தேன் சிவாய நம எனப் பெற்றேன்" என்று செம்மாந்து சொல்கிருர். "யாமார்க்கும் குடியல்லோம் யாதும் அஞ்சோம்" என்று இறுமாந்துரைக்கிருர் திருநீறணியாதவரைக் கண்டால் தாம் அஞ்சுவதாகக் கூறுகிருர். "உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லால்" என்று ஒரு தெய்வ வழிபாட்டை வற்புறுத்துகிருர். "சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலி நாயேனை" என்று வேறுபாடுகளைச் சாடுகிருர். தென்னுடைய

சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்பது உலக முழுமையும் ஒருகாலத்தில் சிவவழிபாடு இருந்ததைக் குறிக்கும்போலும். "இன்றெனக்கருளி", "பால்நினைந்தூட்டும்", "தந்தது உன் தன்னை", "புன்புலால் யாக்கை", "அன்றேயென்றனுவியும்" என்று தொடங்கும் பாடல்கள் அரிய கருத்துடையன; மனத்தை உருக்குவன. திருவாசகம் ஓதும் பயனை "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்திலுள்ளார் சிவனடிக்கீழ்ப் பல்லோரும் ஏத்தப்பணிந்து" என்று கூறியிருக்கிறார்.

மாணிக்கவாசகரின் வரலாறு முழுமையாக கடவுண் மாமுனிவர் இயற்றிய திருவாதவூரடிகள் புராணத்தில் கூறப்பெற்றிருக்கிறது. இன்னும் கடம்பவனபுராணம், உத்தரகோசமங்கைப் புராணம், திருப்பெருந்துறைப் புராணம், இரண்டு திருவிளையாடற்புராணங்கள் முதலியவற்றிலும், வடமொழியில் ஆலாசியமான்மியம். ஆதிகைலாச மான்மியம், மணிவாசக புராணம் முதலியவற்றிலும் விரிவாகக் காணலாம். மறைமலையடிகளாரின் "மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்", க. சுப்பிரமணிய பிள்ளையின் "மாணிக்கவாசகர் வரலாறும் ஆராய்ச்சியும்", சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியாரின் "மாணிக்கவாசகர் அல்லது நீத்தார் பெருமை" என்ற நூல்களும் படித்தின்புறத்தக்கன. டாக்டர் போப்பையர், திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் ஆகியோரின் ஆங்கிலமொழி பெயர்ப்பு நூல்களும் கற்றோர்க்கு இன்பம் பயப்பன.

ஆனி மாதம் 10-ஆம் நாள் (24-6-74) மாணிக்கவாசகர் முத்தியடைந்த மகநட்சத்திரம் வருகிறது. அதைக் கொண்டாடி அவர் நெறி நிற்போமாக.

சமயபோதனை

பாடம் 3 வினாக்கள் ஜூன் 1974.

வினாக்கள் இந்த இதழ்க் கட்டுரைகள் பற்றியனவே ஆகும். விடைகளை முழு அளவு (Foolscape size) இரண்டு தனித் தாள்களில் நான்கு பக்கத்திற்குள் எழுதி இச்செயலகத்திற்கு 30-6-1974க்குள் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவேண்டும். சந்தா எண், பெயர், வயது, முகவரி இவற்றைத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

மதிப்பெண் சமம்] [மதிப்பெண் 100

1. திருவாசக எளிமைச் சிறப்பை விளக்குக.
2. "பிரத்திய சமுத்பாதம்" என்றால் என்ன?
3. 'பொருள்கள் கணத்திற்குக்கணம் மாறுபடுகின்றன' எனும் பௌத்தர்கள் கொள்கை சரியானதா?
4. யார், சொல்லத் தகுதியுடையவர்கள்?
5. "மெய்மை" என்பதனை எத்தனைவகையாகப் பிரிக்கலாம்? விளக்குக.
6. உண்மை, ஏற்புடைமை என்னும் இருவகை இலக்கணங்களை ஆதாரமாகக்கொண்டு "மெய்ப் பொருளை" விளக்குக.
7. இராமாநுசருக்குத் 'திருப்பாவைசீயர்' என்ற பெயர் எவ்வாறு பொருந்தும்?
8. மாறனேரிநம்பிக்குப் பெரியநம்பிகள் ஈமக்கடன் செய்தபோது பழித்துப்பேசியவர்களுக்கு அவர் கூறிய பதில் என்ன?
9. சிவனடியார்களுக்குத் தொண்டுசெய்து முத்தியடைந்தவர்கள் எத்தனைபேர்? யார், யார்?
10. திருவாசகத்தின் சிறப்பியல்கள் என்னென்ன?

விடைகளை எழுதி உரிய அஞ்சல்தலை யொட்டிக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவேண்டும்:—

"அருளோசை"

தமிழ்நாடு தெய்விகப் பேரவை

9, மகாராஜா சூரியராவ் சாலை,

ஆள்வார்பேட்டை,

சென்னை-600018.

" அருளோசை "

(தொகுதி-2)

மணி-2 ஓசை 1 முதல் 12 இன் பொருளடக்கம்.

திருவாசக வழிபாடு

அக்கால அரசியலில் அமைச்சராக விளங்கி அருளியலில் பண்பட்ட அடியவராக விளங்கியவர் மாணிக்கவாசகர். நாயக, நாயகி பாவத்தில் இறைவனேடு தொடர்பு கொண்டு அவர் அருளிய திருவாசகத்தின் உள்ளமுருக்கும் தன்மையைத் தமிழகம் நன்குணரும். திருவாசகத்தைக் "கேட்டபொழுது அங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும் வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான நாட்டமுறும்" என்ருர் திருவருட்பிரகாச வள்ளலார்.

"முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்பவராகவும், நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைப்பவராகவும், மண்ணதனில் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடபவராகவும், வெந்துவிழும் உடற்பிறவி மெய்யென்று வினைபெருக்கி வீழ்பவராகவும், சாதல் பிறப்பென்னும் தடஞ்சுழியில் தடுமாறுபவராகவும், செம்மைநலம் அறியாத சிதடரொடும் திரிபவராகவும்" தன்னையே பாவித்துக் கொண்டு நமக்காக அவர் பாடிய திருவாசகப் பாக்கள், ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பவை.

சிவப்பிரகாச சுவாமிகள், நால்வர் நான்மணி மாலை நூலில், 'பூ, என்ருல் பொறிவாழ் பூ. 'பா' என்ருல் திருவாசகமே எனப் பாராட்டியுள்ளார்.

"செய்ய வார்சடைச் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூ ரன்ப
"பா"வெனப் படுவதுன் பாட்டுப்
"பூ"வெனப் படுவது பொறிவாழ் பூவே!"

வேதத்தை ஓதுவதால் விண்ணுலகின் உயர்ந்த பதங்களையே அடையலாம்; ஆனல் மாணிக்கவாசகர் வாய்மலர்ந்த தமிழ் மாமறையின் ஆசகன்ற அனுபவமோ மேலான முத்தியின்பத்தை கொடுக்க வல்லது என்பார்.

மாணிக்க வாசகன் புகன்ற வாசகம்
யாவரும் ஓதும் இயற்கைத் தாதலின்
பொற்கல நிகர்க்கும்; பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்கும்; மதுரவாசகம்
ஓதின் முத்தி உறுபயன்;
வேதம் ஓதின் மெய்ப்பயன் அறமே!

திருவாசகம் தில்லைச் சிற்றம்பலத்தே நள்ளிருளில் நட்டம் பயின்ருடும் நாதன் என்றும் கேட்டு இன்புற்றுக் கொண்டிருக்கும் இனிமை நலம் சான்றது. இன்றும் திருவாசக வழிபாட்டையே சிவவழிபாடாகக் கருதிப் போற்றும் திருமடங்களும்கூட உண்டு. திருவாசக பூசை செய்து அவ்வருட்பாக்களை நாள்தோறும் பாராயணம் செய்கின்ற சிவனடியார்களும் உண்டு. மனம் மாசற்று ஈரம் கொண்டதாகச் செம்மைபெறவேண்டும் என்று கருதுபவர்கள், மிக எளிமையானதும், யாவரும் எளிதாகக் கடைப்பிடிக்கக் கூடியதாகவும் உள்ள திருவாசக வழிபாட்டை மேற்கொள்ளலாம்.

எனவே வரும் மாணிக்கவாசகர் திருநட்சத்திரத்தன்று முதல், திருவாசக வழிபாட்டை மேற்கொள்ளும்படி அன்பர்களைக் கேட்டுக் கொள்கிரேம். இத்தகைய வழிபாட்டைக் கடைப்பிடித்து, நாள்தோறும் இயன்ற அளவு திருவாசகப் பதிகங்களைப் பாராயணம் செய்து வந்தால் 'சாதகமேன்? சஞ்சலமேன்? குருமொழியை விரும்பி அயல் கூடுவதேன்?" என்ருர் திருவருட்பிரகாச வள்ளலார்.

ஆனந்த ஆண்டு ஆனித் திங்கள் 10 ஆம் நாள் (21-6-74) திங்கட்கிழமையன்று மாணிக்கவாசக சுவாமிகள் திருநட்சத்திரம் மகம் வருகிறது.